செ.வெ.எண்: 907/2016 நாள்: 24.12.2016

# <u>பத்திரிக்கை செய்தி</u>

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவுப்படி 23.12.2016 தேதியன்று மாவட்ட உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக பணியாளர்கள் அடங்கிய குழுக்கள் மூலம் ஒரே நேரத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் VCS வடசேரி-1, ARS சூரப்பள்ளம் ஆகிய நியாயவிலைக் கடைகளிலும், தோவாளை வட்டத்தில் PACB தாழக்குடி-A நியாயவிலைக் கடையிலும், கல்குளம் வட்டத்தில் TEFSCS பாளையம் மற்றும் PACB தெற்றை ஆகிய நியாயவிலைக் கடைகளிலும், விளவங்கோடு வட்டத்தில் PACB குழிச்சல், ARS விளாத்துறை மற்றும் KVTCMS அம்சி ஆகிய நியாயவிலைக் கடைகளிலும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலுள்ள வீடுகளிலும் போலி குடும்ப அட்டைகள் குறித்தும் நியாயவிலை அங்காடிகளின் செயல்பாடுகள் குறித்தும் 100% திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. தணிக்கையின் போது போலி என கண்டறியப்பட்ட **22** குடும்ப அட்டைகளுக்கு உணவு பொருட்கள் நிறுத்தம் செய்யப்பட்டது. மேலும் இருப்புக்குறைவு, எடைகுறைவு மற்றும் போலிப்பட்டியல் போன்ற இனங்களில் முறைகேடு செய்யப்பட்ட நியாயவிலை அங்காடி பணியாளர்களின் மீது **ரூ.87,675/-** அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஒம்/-
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.